Maize Milling Plant, Udumalpet

* 13. *Q.* **DR. T. R. JANARTHANAM** (on behalf of Thiru S. J. Sadiq Pasha) : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether it is a fact that a Maize Milling Plant in Udumalpet which was in good condition was sold by the Tamil Nadu Agro Industries Corporation; and

(*b*) if so, the details of the transaction?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தமிழ்நாடு வேளாண் தொழில்கள் கழகம் உடுமலைப்பேட்டையில் உள்ள மக்காச்சோள மாவாலையை இன்னும் விற்கவில்லை. சோள ரவைக்கு பொதுமக்களிடம் போதிய வரவேற்பு இல்லாத காரணத்தால், இந்த ஆலை வியாபார ரீதியில் இயங்க இயலவில்லை. எனவே இவ்வாலையை விற்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு, டெண்டர்கள் அனுப்புமாறு கேட்டு தமிழக ஆங்கில நாளேடுகளில் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. டெண்டர்கள் பெற கடைசி நாள் 31—10—1983 ஆகும். வரப்பெற்ற டெண்டர்களை ஆய்வு செய்த பின் இதுபற்றி முடிவெடுக்கப்படும் என்று தமிழ்நாடு வேளாண் தொழில்கள் கழகம் தெரிவித்துள்ளது.

புகையிலை ஆராய்ச்சி நிலையம்.

* 14. **வினா—டாக்டர் இரா. சனார்த்தனம் (திரு. க. மீனாட்சிசுந்தரம் சார்பில்) :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழகத்தில் புகையிலை ஆராய்ச்சிக்கென தனி நிலையம் ஏதும் உள்ளதா ?

(இ) இல்லையெனில், அதனை அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(உ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (அ) ஆம். மதுரை மாவட்டத்தில் வேடசந்தூரில் உள்ளது.

(இ) கேள்வி எழவில்லை.

(உ) மதுரை மாவட்டத்தில் வேடசந்தூரில் உள்ள புகையிலை ஆராய்ச்சி மையம், மைய அரசின் இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் கட்டுப்பாட்டில் (I.C.A.R.) இயங்கி வருகிறது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS